சுருக்கம்

மாற்றுத்திறனாளிகள் நலத் துறை – 2022-ஆம் ஆண்டு சுதந்திர தின விழா – மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக சிறந்த சேவை புரிந்த நபர்கள் / நிறுவனங்கள் – தமிழக அரசின் மாநில விருதுகள் வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந–2)த் துறை

அரசாணை (ப) எண்.28

நாள்: 08.08.2022
சுபகிருது, ஆடி 23,
திருவள்ளுவர் ஆண்டு, 2053.

படிக்கப்பட்டது :

1. அரசாணை (1ப) எண்.02, மாற்றுத்திறனாளிகள் நலத் துறை, நாள் 20.06.2011.
2. அரசாணை (நிலை) எண்.29, மாற்றுத்திறனாளிகள் நலத் துறை, நாள் 08.08.2011.
3. அரசாணை (நிலை) எண்.13, மாற்றுத்திறனாளிகள் நலத் துறை, நாள் 03.05.2017.
4. மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர் ந.க.எண்4731/ உ.உ.பிரிவு/2022, நாள் 15.07.2022.

******

ஆணை:

ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தின விழாவின் போது மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக தொண்டாற்றியதற்காக கீழ்கண்ட பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு தமிழக அரசின் மாநில விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன:-

1) மாவட்ட ஆட்சித் தலைவர்.
2) மருத்துவர்.
3) வேலை வாய்ப்பளித்த தனியார் நிறுவனம்.
4) அரசு சாராத தொண்டு நிறுவனம்.
5) சேவை புரிந்த சமூகப் பணியாளர்.
6) சிறந்த மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி.

2. மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் சுதந்திர தின விழா அன்று விருது வழங்க மாநில அளவில் தேர்வு குழுவை மாற்றியமைத்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலே இரண்டாவது மற்றும் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பாக சேவைகள் புரிந்த நபர்கள் / நிறுவனங்களுக்கு விருது வழங்குவதற்கான வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

3. அதன்படி 2022–ஆம் ஆண்டு சுதந்திர தின விழாவின் போது தமிழக அரசின் மாநில விருதுகள் வழங்குவதற்கென, மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக சேவை புரிந்த நபர்கள்/ நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்களிலிருந்து தகுதி வாய்ந்த நபர்கள் மற்றும் நிறுவனங்களை தேர்வு செய்யும் பொருட்டு 15.07.2022 அன்று தேர்வுக் குழுவின் கூட்டம், மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் செயலாளர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. விருதுகளுக்கென பெறப்பட்ட விண்ணப்பங்களை தேர்வுக் குழு உறுப்பினர்கள் ஆய்வு செய்து வழங்கிய ஆலோசனைப்படி, 2022-ஆம் ஆண்டு சுதந்திர தினவிழாவின் போது பின்வரும் நபர்கள்/ நிறுவனங்களுக்கு தமிழக அரசின்

மாநில விருதுகளை வழங்கலாம் என முடிவு செய்து அரசு அவ்வாறே ஆணையிடுகிறது:-

| வ. எண். | விருதின் வகை | | விண்ணப்பதாரரின் பெயர் |
|---|---|---|---|
| 1. | சிறந்த மாவட்ட ஆட்சியர் | 1. | திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர். |
| | | 2. | டாக்டர்.அ.அருண் தம்புராஜ், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சியர், நாகப்பட்டினம். |
| 2. | சிறந்த மருத்துவர் | 1. | மரு.பா.ஜெய் கணேஷ் மூர்த்தி, 257/A, மருத்துவமனை குடியிருப்பு, சிறைச்சாலை, மலைவீதி, உதகை. |
| 3. | சிறந்த நிறுவனம் | 1. | ரெனேசான்ஸ் அறக்கட்டளை, களமாவூர், குளத்தூர் தாலுக்கா, புதுக்கோட்டை–622 502. |
| 4. | சிறந்த சமூக பணியாளர் | 1 | திருமதி சு.அமுதசாந்தி, எண்.66/44, கம்பர் தெரு, எஸ்.எஸ்.காலனி, மதுரை–10. |
| 5. | மாற்றுத்திறனாளிகளை அதிக அளவில் பணியமர்த்திய நிறுவனம் | 1. | டாபே ஜெ ரிஹாப் சென்டர், (TAFE JRehab Centre) மதுரை-தேனி சாலை, அலம்பட்டி, நாகமலை, புதுக்கோட்டை–625 019, மதுரை. |
| 6. | சிறந்த மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி | 1. | மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, திண்டுக்கல் மாவட்டம். |

4. மாற்றுத் திறனாளிகளுக்கு சேவை புரிந்ததற்காக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மற்றும் சிறந்த நிறுவனங்களுக்கான விருதுகள் (மாவட்ட ஆட்சியர் தவிர) 2022 ஆம் ஆண்டு சுதந்திர தினவிழாவின் போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்படும். மேலும், மாவட்ட ஆட்சியருக்கான விருதினை மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில் வழங்கவும் இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. ஆனந்தகுமார்,
அரசு செயலாளர்.

பெறுநர்
மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர், சென்னை–5.
சம்பந்தப்பட்ட நபர்கள்.
(மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் வழியாக)

**நகல்:**
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
பொது (பொது–1)த் துறை, சென்னை–9.
தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி, சென்னை–1.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்
8.8.22